மின்னிதழ்
# தேசியம்
THESIYAM தேசியம்
www.thesiyamnews.com

WELLA HAIR DRESSING
WELLA வெலா சலூன்
Ladies & Gents
FACIAL | STRAIGHTING | BLEACHING | MASSAGING | THREADING | STEP CUT | LAYER CUT



No.08, Nallur New Market, Kalviyankadu, Jaffna.
Tel : 021 205 4116 | 077 684 6262 | 071 1000 023

மலர்: 01 | குரல்: 106 | வள்ளுவர் ஆண்டு 2054 | வியாழக்கிழமை 14.12.20 ... ங்கள் 08

# 2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் 41 வாக்குகளால் நிறைவேற்றம்!



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் சமர்ப்பிக்கப்பட்ட 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்புக்கான இறுதி வாக்கெடுப்பு 41 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பக்கம்–02

## மகாவலி அதிகார சபையின் பிரதிபலிப்பே வனவளத் திணைக்களம்!

## சிறீதரன் எம்.பி தெரிவிப்பு!



மகாவலி அதிகாரசபை யினூடாக தமிழர்களின் நிலம் எவ்வாறு பறிக்கப்பட்டதோ அதே செயற்பாட்டை வனவள த்திணைக்களம் மீண்டும் முன் னெடுத்து வருவதாக பாராளு மன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரி வித்தார்.

பக்கம்–02

## இலங்கைக்கு கடத்தப்படவிருந்த வலி நிவாரணி மாத்திரைகள் மீட்பு!

தமிழ் நாட்டிலிருந்து இலங்கைக்கு கடத்தப்படவிருந்த சுமார் ஒரு லட்சம் வலி நிவாரணி மாத்திரைகளை இந்திய கடலோர பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

பக்கம்–02

## ஜனாதிபதி ரணிலுடன் சுமந்திரன், சாணக்கியன் சந்திப்பு

### இரு விடயம் தொடர்பில் கலந்துரையாடல்






ஜனாதிபதியுடனான தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களின்

பக்கம்–02

## யாழ்ப்பாணத்தில் இளம் குடும்பப்பெண் உயிரிழப்பு கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள உடற்கூற்று மாதிரிகள்!

யாழில் திருமணமாகி ஒரு வருடமேயான இளம் குடும்பப்பெண் ஒருவர் நேற்றையதினம் உயிரிழந்துள்ளார்.

பக்கம்–02

## கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறைக்கு புதிய சட்டம்



கடற்றொழில் மற்றும் நீரியல் வளத் துறைக்கான திருத்தப்பட்ட புதிய சட்ட மூலம் தயாரிக்கப்பட்டுவருவதாகவும் அதற்கான வரைவு தற்போது துறைசார் நிபுணர்களின் கருத்துக்களுக்காக சமர்ப் பிக்கப்பட்டுள்ளதாகவும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித் தார்.

பக்கம்–02

## முச்சக்கர வண்டி முதல் கிலோமீற்றருக்கான கட்டணம் 150 ரூபாவிற்கு மேல் அதிகரிக்கப் பட உள்ளது.

ஜனவரி முதல் வற் வரி 18 வீதம் அதிகரிக் கப்படவுள்ள நிலையில்,

பக்கம்–02

## அரசுக்கு வெள்ளையடிக்கும் செயற்பாட்டையே உலகத் தமிழர் பேரவை முன்னெடுக்கின்றது!

### சீறுகின்றார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்



தமிழர் தாயகப்பகுதிகளில் திட்டமிடப்பட்ட இனவழிப்பு நடவடிக்கைகளும், தமிழர் களுக்கு எதிரான அடக்குமுறைகளும் மேலோங்கியுள்ள சூழ்நிலையில், ஜனா திபதி ரணில் விக்கிரமசிங்கவை மைய மாகக்கொண்டு உலகத்தமிழர் பேரவை யினால் அண்மையில்

பக்கம்–07

தேசியம் பத்திரிகையின் மின்னிதழைப் பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழவில் இணைந்து கொள்ளுங்கள்.

SCAN ME

## 2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவு...

அரசாங்கத்தின் 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தின் மீதான வாக்கெடுப்பு இன்று (13.12.2023) நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது.

இதன்போது வரவு செலவு திட்டத்திற்கு ஆதரவாக 122 வாக்குகள் அளிக்கப் பட்டுள்ளதுடன் இதற்கு எதிராக 81 வாக்குகள் அளிக்கப்பட்டன.

இதேவேளை பொதுஜன பெரமுன மற்றும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் என்பன வரவு செலவுத் திட்டத்திற்கு ஆதரித்து வாக்களித்திருந்தமை குறிப்பிடத் தக்கது.

ஐக்கிய மக்கள் சக்தி எதிர்த்து வாக்களித்தது. அத்துடன் தேசிய மக்கள் சக்தி எதிராகவே வாக்களித்ததுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் உறுப்பினர்கள் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

மேலும் இந்த வாக்கெடுப்பிலிருந்து யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி விக்னேஸ்வரன் விலகியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

முன்னதாக 2024 ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு 45 மேலதிக வாக்குகளால் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

## இலங்கைக்கு கடத்தப்படவிருந்த...

தமிழ் நாட்டின் ராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் அடுத்த வேதாளை கடற்கரையில் இருந்தே இந்த வலி நிவாரணி மாத்திரை கள் இலங்கைக்கு கடத்தப்படவிருந்தன.

இது தொடர்பான ரகசிய தகவல் கிடைத் ததையடுத்து குறித்த இடத்திற்கு சென்ற கடலோர பொலிஸார், சுமார் ஒரு லட்சம் வலி நிவாரணி மாத்திரைகளை கைப்பற்றி யுள்ளனர்.

இதன்படி பறிமுதல் செய்யப்பட்ட வலி நிவாரணி மாத்திரைகளில் மொத்த மதிப்பு சுமார் 20 லட்சம் ரூபாயளவில் இருக்கலாம் என்றும் விசாரணையில் தெரியவந்துள்ளது

## யாழ்ப்பாணத்தில் இளம் குடும்பப்பெண் உயிரிழப்பு...

யாழில் திருமணமாகி ஒரு வருடமேயான இளம் குடும்பப்பெண் ஒருவர் இன்றையதினம் உயிரிழந்துள்ளார்.

உடுவில் - கற்பகப் பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த சண்முகநாதன் துசீந்தினி (வயது 26) என்ற குடும்பப் பெண்ணே உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில், உயிரிழந்த பெண்ணிற்கு திருமணமான நிலையில் அவரது கணவர் புலம்பெயர் நாட்டில் வசித்து வருகின்றார்.

**மரண விசாரணை**

குறித்த பெண்ணுக்கு கடந்த 11ஆம் திகதி உடல் சுகயீனம் ஏற்பட்டது. இதன்போது அவர் தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். மேலதிக சிகிச்சைக்காக அவர் நேற்றையதினம் (12.12.2023) யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி இன்றையதினம் உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டுள்ளார். இந்நிலையில், மரணத்திற்கான காரணம் தெரியவராத நிலையில் அவரது உடற்கூற்று மாதிரிகள் கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## மகாவலி அதிகார ...

திங்கட்கிழமை இடம்பெற்ற பாராளுமன்ற உரையின் போதே இவ்வாறு தெரிவித் தார். குறித்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், மிக நூதன மான முறையில் நுட்பமாக தமிழ் மக்களி னுடைய காணிகளை பறிப்பதற்கு மகா வலி அதிகாரசபையை பயன்படுத்தினார் களோ அதே போல வேலணை, காரை நகர் சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவுகளில் இருக்கிற காணிகளை பறிப்பதற்கு மிக நுட்பமான காரியங்களை வனவளத் திணைக்களம் முன்னெடுத்து வருகின்றது எனவும் தெரிவித் துள்ளார்.

## ஜனாதிபதி ரணிலுடன் சுமந்திரன், சாணக்கியன் சந்திப்பு

ஜனாதிபதியுடனான தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களின் சந்திப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதால் பண்ணையாளர்களின் 90 ஆவது நாள் போராட்டத்தை முன்னிட்டு பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் அவர்களும், ஆ.யு. சுமந்திரன் அவர்களும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களை சந்தித்து உரையாடியிருந்தார்கள் என எம்.பி. சாணக்கியன் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

**அவர் மேலும் தெரிவிக்கையில்**

அந்த வகையில் மயிலத்தமடு மாதவனை பகுதியில் தொடர்ச்சியாக நடைபெற்று வரும் மாடுகளுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகள் தொடர்பாக கிடைக்கப்பெற்ற புகைப்படங்களை சமர்ப்பித்ததோடு பொலிசாரிடம் வழங்கப்பட்ட முறைப்பாடுகளின் பிரதிகளையும் வழங்கினோம்.

அத்துடன் போராட்டத்தில் ஈடுபடும் எமது மக்கள் 90 நாளாகவும் போராட்டத்தினை தொடர்கின்றனர் என்பதனைப் பற்றியும் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வந்தோம். ஜானாதிபதி கூறிய எந்தவொரு விடயத்தினையும் இப் பிரச்சனைக்கான தீர்வாக நடைமுறைப்படுத்தவில்லை எனவும் தெளிவுபடுத்தினோம்.

இரண்டாவதாக் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களுக்கான விசாரணைகள் இடம்பெறுவதோடு பயங்கரவாத தடுப்புச் சட்டத்தினை பயன்படுத்த மாட்டோம் எனக் கூறிக்கொண்டாலும் அச் சட்டத்தினை கடைப்பிடித்து பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் நிகழ்வில் கலந்து கொண்டோரை இன்றுவரை இனங்கண்டு கைது செய்து கொண்டிருக்கின்றார்கள் என்பதனையும் ஜனாதிபதிக்கு கூறினோம். அத்துடன் உடனடியாக இதனை முடிவிற்கு கொண்டுவர வேண்டுமெனவும், இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களின் பெயர்ப்பட்டியலை ஜனாதிபதிக்கு வழங்கி இவர்களீவ்வு - பயங்கரவாதத் தடைச் சட்டம் இன்றி விடுதலை செய்யப்பட வேண்டுமெனவும் கோரிக்கையினை முன்வைத்தோம் எனத் தெரிவித்துள்ளார்.

## முச்சக்கர வண்டிமுதல் கிலோமீற்றருக்கான கட்டணம் 150...

முச்சக்கர வண்டி கட்டணம், முதல் கிலோமீற்றருக்கான கட்டணம் 150 ரூபாவிற்கு மேல் அதிகரிக்குமென அகில இலங்கை முச்சக்கரவண்டி சாரதிகள் சங்கத்தின் தலைவர் லலித் தர்மசேகர தெரிவித்துள்ளார்.

ஜனவரி முதல் வற் வரி 18 வீதம் அதிகரிக்கப்படவுள்ள நிலையில், எரிபொருளுக்கும் வற் வரி விதிக்கப்படும் எனவும், இதில் பெற்றோல், டீசல் விலை சடுதியாக அதிகரிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே, முச்சக்கரவண்டி கட்டணம் அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

தற்போது, முதல் கிலோமீற்றருக்கான முச்சக்கரவண்டிக் கட்டணம் 100 ரூபாவாக உள்ள நிலையில், இந்த கட்டணம் எதிரவரும் நாட்களில் 150 ரூபாவிற்கும் மேல் அதிகரிக்கப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## கடற்றொழில் மற்றும் நீரியல்...

கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறைக்கான திருத்தப்பட்ட புதிய சட்டமூலம் தயாரிக்கப்பட்டுவருவதாகவும் அதற்கான வரைவு தற்போது துறைசார் நிபுணர்களின் கருத்துக்களுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

மீன்பிடிப் படகுகளில் பேட்டரி மோட்டார்கள் போன்ற எரிபொருள் மாற்று வழிமுறைகள் பயன்படுத்தப் படுவதால் மீனவர்களின் உற்பத்திச் செலவு குறைவதோடு, அதன் மூலம் எரிபொருள் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கை என்பது இரு நாடுகளுக்கும் இடையிலான விடயம் என்பதால் இராஜதந்திர ரீதியிலேயே அதனை அணுக வேண்டியுள்ளது என்றும் கூறினார்.

மேலும் இந்த விடயம் தொடர்பாக பாண்டிச்சேரி மற்றும் தமிழ் நாட்டு அரசு உட்பட இந்திய ஊடகங்களுடன் கலந்தரையாடுவதே சிறந்த தீர்வாக அமையும் என்றும் அதுவே தனது நிலைப்பாடு என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

## அநுராதபுரத்தில் எச்.ஐ.வி. அதிகரிப்பு

அநுராதபுரம் மாவட்டத்தில் எச்.ஐ.வி. தொற்றாளர்கள் அதிகரித்துள்ளனர் என்று மாவட்ட சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த வீதம் குறித்து மாவட்டச் சுகாதார அதிகாரிகள் கவலை வெளியிட்டுள்ளனர். இந்த வருடத்தில் 19 எச்.ஐ.வி. தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என்று அநுராதபுரம் மாவட்டச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நிமல் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

அவர்களில் பெரும்பாலானோர் ஆண்கள் என்றும், இந்த அதிகரிப்புக்கு ஓரினச்சேர்க்கை உறவுகள் காரணம் என்று நம்பப்படுகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

# தமிழ் தகவல் நடுவத்தின் மனித உரிமைகள் தின விழாவில் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் கௌரவிப்பு.



சர்வதேச மனித உரிமைகள் தினத்தினை முன்னிட்டு தமிழ் தகவல் நடுவத்தின் (TIC) உலக மனித உரிமைகள் தினம் 2023 நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (10) இலண்டனின் பார்நெட் (Barnet) நகரில் இல் நடைபெற்றது.

ஐக்கிய நாடுகள் சபையினால் பிரகடணப்படுத்தப்பட்ட உலகளாவிய மனித உரிமைகள் தினத்தை நினைவுகூறுவதோடு இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராகவும் உலகெங்கிலுமுள்ள அனைத்து இனத்தினருக்கு எதிராகவும் இழைக்கப்பட்டு வரும் மனித உரிமை மீறல்களை நினைவு கூர்ந்து அவற்றுக்கு எதிராக குரல் கொடுக்கவும் அவற்றினை சர்வதேசத்திற்கு வெளிப்படுத்தவும் வுஐஊ யினால் ஆண்டுதோறும் மனித உரிமைகள் தின நிகழ்வு நடாத்தப்பட்டு வருகின்றது.

அதன்படி ஐ.நா. மனித உரிமைகள் தினத்தை அறிமுகப்படுத்தி 75 ஆவது ஆண்டான நடப்பாண்டில் வுஐஊ யின் மனித உரிமைகள் தின நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (10) இலண்டன் பார்நெட் நகரில் அமைந்துள்ள ஆரடவை ஊரடவரசயட ஊழஅஅரநைவல ஊநவெசந இல் பிற்பகல் 2.00 மணிமுதல் 6.00 மணி வரை நடைபெறவுள்ளது.

அனைவருக்குமான கண்ணியம் சுதந்திரம் மற்றும் நீதி (Dignity> Freedom and Justice for All) என்ற கருப்பொருளை மையமாக் கொண்ட TIC யின் மேற்படி மனித உரிமைகள் தின நிகழ்வு மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமானது.

விபுலானந்த அடிகளார் நாவலர் கீர்த்திமாலை என்னும் நூலில் தமிழ்மொழி வாழ்த்து என்று குறிப்பிடப்பட்டுள்ள, இலங்கைத் தமிழர்களுக்கே உரித்தான தமிழ் மொழி வாழ்த்து பாடல் இசைக்கப்பட்டது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக பார்னட் நகர மேயர் கவுன்சிலர் நாகுஸ் நரேந்திரா அவர்களும், சிறப்பு விருந்தினராக பிரித்தானியாவின் பார்னட் தொகுதிக்கான பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ் மக்களுக்கான பிரித்தானிய அனைத்து கட்சி பாராளுமன்ற குழுவின் துணைத் தலைவருமான மதிப்பிற்குரிய திரேசா வில்லியம் அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

அதே வேளை இந் நிகழ்வின் சிறப்பு பேச்சாளர்களாக கிங்ஸரன் பல்கலைக்கழகத்தின் சர்வதேச அரசியல் பேராசிரியரும் மனித உரிமை மற்றும் சமூக நீதியாளருமான கலாநிதி அன்டி கிகின் பொட்டம் (Dr Andy Higginbottom) அவர்களும் இனப்படுகொலைகளை தடுப்பதற்கான அனைத்துக்கட்சி பாராளுமன்ற குழுவின் இயக்குனர் அன்டி பெய்லி (Mr Andy Bailey) அவர்களும் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

அத்துடன் மதத்தலைவர்கள் அரசியல் பிரமுகர்கள் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் கல்வியலாளர்கள் மற்றும் TIC யின் செயற்பாட்டாளர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வின் பிரதான சிறப்பம்சமாக TIC யினால் வழங்கப்படும் 2023 ஆம் ஆண்டுக்கான மனித உரிமைகள் விருதுகள் இம்முறை இருவருக்கு வழங்கப்பட்டது.

இலங்கையில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் மனித உரிமை மீறல்கள் மற்றும் இராணுவ அடக்கு முறைகளுக்கு எதிராக தொடர்ச்சியாக குரல் கொடுத்துவரும் உண்மைக்கும் நீதிக்குமான சர்வதேச செயற்திட்டத்தின் (ITJP) இயக்குனரும் முன்னாள் ஊடகவியலாளர் மனித உரிமை செயற்பாட்டாளர் மற்றும் ஐ.நா.வின் ஆலோசகருமான பிரான்சிஸ் ஹறிசன் (Frances Harrison) அவர்களுக்கும், தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்படும் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக துணிச்சலுடன் செயலாற்றிவரும் ஊடகவியலாளரும் மனித உரிமைகள் செயற்பாட்டாளருமான பாசனா அபேவர்த்த (Bashana Abeyawardane) அவர்களுக்கும் மேற்படி விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

TIC யின் நிறுவனர்களில் ஒருவரும் முன்னாள் இயங்குனருமான மறைந்த வரதகுமார் அவர்களின் ஞாபகார்த்த விருது எழுத்தாளரும் மனித மரபியல் கல்வி ஆய்வாளருமான வைத்தியர் சிவா தியாகராஜா (Dr Siva Thiagaraja) அவர்களுக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டது.

அத்துடன் பிரித்தானியாவில் தமிழர் பண்பாட்டு மையம் (Tamil Heritage Centre) ஒன்றை உருவாக்குற்கான தேவை தொடர்பிலான ஆவணப்படம் காண்பிக்கப்பட்டதுடன், அதற்கான திட்ட முன்மொழிவும் கோரிக்கையும் நகர மேயரிடம், TIC மற்றும் ஊஊனுயின் பண்பாட்டு பிரிவின் சார்பில் வழங்கி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வின் சிறப்பு கலைநிகழ்வாக, அலன் பிரதீபன் அவர்களின் மனிஉரிமைகள் தொடர்பிலான “றப்” இசையும், இலண்டன் மெய்வெளி அரங்க கலைஞர்களின் “நான் புதைக்கப்பட்டவன்” என்ற சிறப்பு நாடகமும் இடம்பெற்றன. அத்துடன் தொண்டர்களுக்கான மதிப்பளிப்பு மற்றும் அதிர்ஷ்ட இலாப சீட்டிழுப்பு என்பவையும் சிறப்புற இடம்பெற்றன.

இந்த நிகழ்வு வுஐஊ யின் பணிப்பாளர்களில் ஒருவரான திரு கீத் குலசேகரம் அவர்களின் தலைமையில் சிறப்பான முறையில் இடம்பெற்றதுடன், செயற்பாட்டாளர்களான செல்வன் டிலக்ஷன் மனோரஜன் மற்றும் செல்வி சுபமகிசா வரதராசா ஆகியோர் தொகுத்து வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கடற்கரையோரப் பிரதேசத்தை சுவீகரிக்கும் நடவடிக்கையை வன ஜீவராசிகள் திணைக்களம் கைவிட வேண்டும்!



அராலி தொடக்கம் பொன்னாலை வரையான கடற்கரையோரப் பிரதேசத்தை சுவீகரிப்பதற்கு வன ஜீவராசிகள் திணைக்களம் எடுத்துள்ள முயற்சிகளை கைவிட வேண்டும் என வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் தலைவரும் அகில இலங்கை தொழிலாளர் சமூகங்களின் கட்டமைப்பின் தேசிய அமைப்பாளருமான என்.வி.சுப்பிரமணியம் தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், அராலி தொடக்கம் பொன்னாலை வரையான கடற்கரையோரப் பகுதியை நம்பி நூற்றுக்கணக்கான குடும்பங்கள் தொழில் புரியும் நிலையில் அதனை குழப்பும் விதத்தில் குறித்த செயற்பாடு முன்னெடுக்கப்படுகிறது. கடந்தகாலத்தில் அப்பகுதியில் கண்டல் தாவரங்களை நட்டுவிட்டு அரசாங்கம் திட்டமிட்டு காணிகளையும் இடங்களையும் அபகரிக்கின்ற செயற்பாடுகளாகவே பார்க்கின்றோம். அரசாங்கம் குறித்த கபளீகர முயற்சி நடவடிக்கையை அரசாங்கம் கைவிட்டுவிட வேண்டும் என கோரிக்கை விடுத்தார்.-

# முல்லைத்தீவு இ.போ.ச ஊழியர்கள் காலவரையறையின்றிய வேலை நிறுத்தப் போராட்டம்.








சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு இ.போ.ச ஊழியர்கள் நேற்று (12) ஆரம்பித்த காலவரையறையின்றிய வேலை நிறுத்த போராட்டம் இரண்டாவது நாளாக தொடர்கிறது.

முல்லைத்தீவு இலங்கை போக்குவரத்து சபை ஊழியர்கள் நேற்றையதினம் (12) ஆரம்பித்த காலவரையறையற்ற வேலை நிறுத்த போராட்டத்தினை இன்று (13) இரண்டாவது நாளாகமேற்கொண்டு வருகின்றனர்.

நேற்றையதினம் முல்லைத்தீவில் இருந்து யாழ்ப்பாணம் சென்ற இ.போ. ச பேருந்தினை தேராவில் பகுதியில் இடைமறித்த தனியார் பேருந்து சாரதிகள் நடத்துனர்கள், இ.போ.ச. சாரதி மீதும் பேருந்து நடத்துனர் மீதும் தாக்குதல்கள் நடத்தினர் இதில் நடத்துனர் காயமடைந்து முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிந்தார்.

இவ்வாறான நிலையில் உரிய நேர அட்டவணையை நடைமுறைப்படுத்தப் படாமையே தங்களது இந்த முரண்பாடுகளுக்கு காரணம் எனவும் எனவே தமக்கான உரிய நேரங்களை வழங்கி மக்களுக்கான சேவைகளை சரியாக வழங்குவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கோரி இலங்கை போக்குவரத்து சபை ஊழியர்கள் இந்த கால வரையறையற்ற போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

இப்போராட்டத்தில் தனியார் பேருந்து குழுவினரால் தாக்கப்பட்ட எமது காப்பாளருக்கு நீதி வழங்கப்பட வேண்டும் எனவும், நேர அட்டவணை பங்கீட்டு நியதிசட்டத்தின் அடிப்படையில்
60: 40 என்ற விகிதத்தில் தரப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து வேலை நிறுத்தத்தை மேற்கொண்டுள்ளனர்.

குறித்த இப்போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து வவுனியா, கிளிநொச்சி, காரைநகர், பருத்தித்துறை, யாழ்ப்பாணம் ஆகிய சாலைகளில் இருந்து முல்லைத்தீவிற்கான போக்குவரத்து சேவை இன்று (13) இடம் பெறாது என வடமாகாண தொழிற்சங்கம் அறிவித்துள்ளது.

சாலை பிரதான நுழைவாயில் கதவில் மக்களுக்கு சேவை செய்வது என்ன பிழையா? நேரம் என்ன எங்களுக்கு தடையா? , முல்லைத்தீவு- கொக்கிளாய் 36 முஆ. இ.போ.சபை கட்டணம் 203 ரூபாய் தனியார் கட்டணம் 250 ரூபாய், வீதி போக்குவரத்து அனுமதிப்பத்தரமின்றி சேவையாற்றும் முல்லைத்தீவு தனியார் பேருந்துகள் அனைத்தும் நிறுத்தப்பட வேண்டும் போன்ற சுலோகங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

இதேவேளை தனியார் பேருந்துகள் சேவைகள் வழமை போன்று முன்னெடுக்கப்படுகின்றன.

இந்நிலையில் தமக்கான நிரந்தர தீர்வாக 60:40 சேவை உரிய வகையில் நடைமுறைப்படுத்துவதற்கான உத்தரவாதம் கிடைக்காமல் தங்களது போராட்டம் நிறுத்தப்படமாட்டாது எனவும் ஊழியர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது

# இலங்கை விமானப்படையின் 73 ஆவது ஆண்டு பூர்த்தி யாழில் கொண்டாட வடக்கு ஆளுநர் அனுமதி!





இலங்கை விமானப்படையின் 73 ஆவது ஆண்டு பூர்த்தியை யாழ்ப்பாணத்தில் கொண்டாட தீர்மானிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸிடம், இலங்கை விமானப்படையின் படைத்தளபதி ஏயார் மார்சல் உதேனி ராஜபக்ஸ தெளிவுப்படுத்தினார்.

யாழ்ப்பாணத்திலுள்ள வட மாகாண ஆளுநரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில், இலங்கை விமானப்படையின் படைத்தளபதி உள்ளிட்ட உயர்மட்ட அதிகாரிகள் ஆளுநரை இன்று (13) சந்தித்து கலந்துரையாடினர்.

இதன்போது ஆளுநரின் செயலாளர் மு.நந்தகோபாலன், ஆளுநரின் இணைப்புச் செயலாளர் நிரான் மல்லவராச்சி, வடக்கு மாகாண கல்விச் செயலாளர் பற்றிக் நிரஞ்சன், தொல்பொருளியல் திணைக்களத்தின் யாழ்,கிளிநொச்சி மாவட்டங்களுக்கான பிராந்திய அலுவலகத்தின் அதிகாரிகள், இலங்கை விமானப்படையின் உயர் அதிகாரிகள் உள்ளிட்டோர் இந்த சந்திப்பில் கலந்துக் கொண்டனர்.

அந்தவகையில், எதிர்வரும் 2024ஆம் ஆண்டு மார்ச் மாதம் 02ஆம் திகதி கொண்டாடப்படவுள்ள விமானப்படையின் 73 ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு யாழ் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்திற்காக எரிவாயு விசையாழி விமான இயந்திரங்களை வழங்கவுள்ளதாகவும், பல்கலைக்கழக மாணவர்களுக்கான கற்றல் உதவிகளை பெற்றுக்கொடுக்க உள்ளதாகவும் அத்துடன் யாழ் மாவட்டத்திலுள்ள 73 பாடசாலைகளை புனரமைக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். மேலும், 73,000 தமிழ் மற்றும் ஆங்கில மொழி புத்தகங்களை வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளதாக விமானப் படையின் படைத்தளபதி, ஆளுநரிடம் தெரிவித்தார்.

இதேவேளை, மருத்துவ முகாம், பற்சிகிச்சை முகாம், கண் சிகிச்சை முகாம், இலவச கண்ணாடிகளை வழங்குதல், இரத்ததான முகாம் நடத்துதல், 73 ஆயிரம் மரக்கன்றுகளை பகிர்ந்தளித்தல் உள்ளிட்ட செயற்பாடுகளை முன்னெடுக்கவும் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அத்துடன், சைக்கிள் ஓட்டப்போட்டி, கல்விக் கண்காட்சி, மாலை நேர இசைநிகழ்ச்சி என்பவற்றை நடாத்தவும் எதிர்பார்ப்பதாக விமானப்படையின் படைத்தளபதி ஆளுநரிடம் தெரிவித்தார்.

விடயங்களை கேட்டறிந்த வடக்கு மாகாண ஆளுநர், இன நல்லிணக்கத்திற்கும். ஒற்றுமைக்கும் இந்த செயற்பாடுகள் வழிவகுக்கும் என கூறினார். அத்துடன் முப்படைகளின் செயற்பாடுகள், படைத்தளங்கள் குறித்து கல்வி சுற்றுலாக்கள் ஊடாக மாணவர்களை தெளிவுப்படுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் தெரிவித்தார்.

இலங்கை விமானப்படையின் 73 ஆவது ஆண்டு பூர்த்தியை இம்முறை வடக்கு மாகாணத்தில் கொண்டாடுவதற்கு தீர்மானிக்கப்பட்டமை மகிழ்ச்சியளிப்பதாகவும் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ். எம்.சார்ள்ஸ் தெரிவித்தார்.

# சர்வதேச மனித உரிமைகள் தினம் யாழ்ப்பாணத்தில் சிறப்பு நிகழ்வு!





2023 ஆம் ஆண்டுக்கான சர்வதேச மனித உரிமைகள் தின நிகழ்வைச் சிறப்பிக்கும் முகமாக, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப் பாணப் பிராந்திய அலுவலகம் அனை வருக்குமான கௌரவம், சுதந்திரம், நீதி" எனும் தொனிப்பொருளில் நிகழ்வு ஒன்றை நடத்தியது. இந்த நிகழ்வு நேற்று (13) காலை யாழ்ப்பாணம் டேவிட் வீதியில் உள்ள கலைத்தூது அழகியல் கல்லூரியில் இடம்பெற்றது. நிகழ்வில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவால் தயாரிக்கப்பட்டுள்ள மனித உரிமை பாதுகாவலர்களுக்கான வழிகாட்டல்கள் தொடர்பில் கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெற்றது.

இதன்போது யாழ் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் மற்றும் உத்தியோகத்தர்கள், மனித உரிமைகள் ஆர்வலர்கள், சிவில் சமூகத்தினர், ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டனர்.





# வடக்கு மக்களைத் தங்களுடன் இணையுமாறு கோருகின்ற ஜே.வி.பி வடக்கு-கிழக்கைப் பிரித்தமைக்காகத் தமிழ் மக்களிடம் மன்னிப்பைக் கோருமா?

## பொ. ஐங்கரநேசன் கேள்வி...



ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியின் ஊடாகத்தமிழ் மக்களைத் தங்களுடன் இணையு மாறு கோரிக்கை விடுத்திருக்கிறார்.

தங்கள் மரபுவழித்தாயகமான இணைந்த வடக்கு-கிழக்கை நீதிமன்றப்படியேறிச் சட்ட ரீதியாகப் பிரித்தது ஜே.வி.பி

என்பதைத் தமிழினம் ஒருபோதும் மறவாது. இந்நிலையில், தமிழ் மக்களைத் தங்களுடன் இணையுமாறு

கோருகின்ற ஜே.வி.பி வடக்கு-கிழக்கைப் பிரித்தமைக்காகத் தமிழ் மக்களிடம் மன்னிப்பையுமல்லவா

கோரவேண்டும். அவ்வாறு கோருமா? என்று தமிழ்த்தேசியப்பசுமை இயக்கத் தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் கேள்வி எழுப்பியுள்ளார்.

தமிழ் மக்களைத் தங்களுடன் இணையு மாறு ஜே.வி.பியின் தலைவர் கோரிக்கை விடுத்திருப்பது

தொடர்பாக பொ.ஐங்கரநேசன் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப் பிடுகையில்,

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி 1944ஆம் ஆண்டில் கூட்டிய கொழும்புப் பிரஜைக ளின்பொதுக்கூட்டத்தில் சுதந்திர இலங் கையின் அரசியல் அமைப்புக் கொண் டிருக்க வேண்டிய

கோட்பாடுகள் குறித்து வலியுறுத்தியிருந் தது. அவற்றில், இனங்களுக்குச் சுய நிர்ணயம் தொடர்பாக

பாரதீனப்படுத்த முடியாத உரிமை இருந்து வருகிறது என்பதை அங்கீகரிப்பதும், அவர்கள் விரும்பினால் அவர்களுக்கே உரித்தான சுயாதீன அரசுகளை உருவாக் கிக் கொள்ள முடியுமென்பதை அங்கீகரிப்பதும் ஒரு கோட்பாடாகும்.

ஆனால், கம்யூனிச சித்தாந்தத்தின் அடியொற்றிகளாகத்

தங்களைக்கூறிக்கொள்ளும் ஜே.வி.பி தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை யைப் பற்றி இதுவரையில்

தெரிவித்ததில்லை. தமிழ் மக்களைத் தங்களுடன் இணையக் கோருகின்ற ஜே.வி.பி அவர்களின்

சுயநிர்ணய உரிமையை ஏற்றுக் கொள்வதாகவுமல்லவா தெரிவிக்க வேண்டும். அவ்வாறு ஏற்றுக்கொள்ளுமா?

தமிழ் மக்கள் தங்களுடன் இணைந்தால் அவர்களின் தேவைகளை நிறைவேற்று வதாகவும்

ஜே.வி.பியின் தலைவர் கூறிவருகிறார். முள்ளிவாய்க்காலில் இலட்சக்கணக்காகக் கொல்லப்பட்ட

தமிழ் மக்கள் என்ன தேவைகளின் பொருட்டு நீண்டநெடிய தேசிய விடுதலைப் போராட்டத்தை

முன்னெடுத்தார்கள் என்பது அவர் அறியாததல்ல. தேவைகளை நிறை வேற்றுவோம் என்று கூறும்

ஜே.வி.பி தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்கான தன்வசம் உள்ள தீர்வையுமல்லவா

வெளிப்படுத்தியிருக்கவேண்டும்.

அவ்வாறு வெளிப்படுத்துமா? தமிழ் மக்களின் இந்தக்கேள்விகளுக்கான தெளிவான பதில்களை ஜே.வி.பி வழங் காதவரை தமிழ்மக் களின் மனங்களை அதனால் ஒருபோதும் வெல்ல முடியாது. அதுவரை ஜே.வி.பியின் இந்த அழைப் புகள், அறிவிப்புகள் எல்லாம் ஜனாதிபதித் தேர்தலில் அனுரகுமார திசாநாயக்கவை வெல்ல வைப்பதற்காகத் தமிழ்

வாக்குகளை நோக்கி வீசப்படும் தூண்டில் களாக மட்டுமே உணரப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

**தேசியம் பத்திரிகையில் உங்கள் விளம்பரங்களை பிரசுரிக்க தொடர்பு கொள்ளுங்கள்..!**

021 222 7557

+94 77 149 9094

தேசியம் www.thesiyamnews.com THESIYAM

# ஒட்டுசுட்டான் பண்பாட்டு பெருவிழாவில் பண்டாரவன்னியன் விருது வழங்கி கௌரவிப்பு!

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச பண்பாட்டு பெருவிழாவில் துறை சார்ந்த பத்து பேருக்கு பண்டாரவன்னியன் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளனர்

ஒட்டுசுட்டான் பிரதேச செயலகமும், வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் ஒட்டுசுட்டான் பண்பாட்டுப் பேரவையும் இணைந்து ஏற்ப்பாடு செய்த ஒட்டுசுட்டான் பிரதேச பண்பாட்டு பெருவிழா நேற்று(13) மிகவும் சிறப்பாக இடம் பெற்றது.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் திருமதி பரமோதயன் ஜெயராணி தலைமையில் நடைபெற்ற.இந்த நிகழ்வில் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் கலைத்துறை வளர்ச்சிக்காக அளப்பரிய பங்களிப்பினை நல்கிய துறை சார்ந்த பத்து பேருக்கு பண்டாரவன்னியன் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் கலைத்துறை வளர்ச்சிக்காக அளப்பரிய பங்களிப்பினை நல்கிவரும் செல்வி துரைராசா றஜிதா அவர்களுக்கு இசைத் துறைக்கான பண்டாரவன்னியன் விருதும் மாயவன்சாமி புஸ்பகுமார் அவர்களுக்கு சிற்பத்துறைக்கான பண்டாரவன்னியன் விருதும் குலேந்திரன் யதுகுலன் அவர்களுக்கு குறும்படத் துறைக்கான பண்டாரவன்னியன் விருதும் செல்வி எழிலகன் சதுர்மிலா அவர்களுக்கு நடனத்துறைக்கான பண்டாரவன்னியன் விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்

அத்தோடு ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் கலைத்துறை வளர்ச்சிக்காக அளப்பரிய பங்களிப்பினை நல்கிவரும் சிவராசா சிவதீபன் அவர்களுக்கு நாடகத்துறைக்கான பண்டாரவன்னியன் விருதும் செல்வி தனபாலராஜ் துளசிகா அவர்களுக்கு ஓவியத்துறைக்கான பண்டாரவன்னியன் விருதும் சிவபாலசிங்கம் வாகீசன் அவர்களுக்கு இலக்கியத் துறைக்கான பண்டாரவன்னியன் விருதும் தங்கராசா நிஸாந்தன் அவர்களுக்கு அறிவிப்புத்துறைக்கான பண்டாரவன்னியன் விருதும் சின்னப்பு சின்னத்துரை அவர்களுக்கு நாட்டுக்கூத்துத்துறைக்கான பண்டாரவன்னியன் விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்

அத்தோடு ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் கலைத்துறை வளர்ச்சிக்காக அளப்பரிய பங்களிப்பினை நல்கிவரும் சண்முகம் தவசீலன் அவர்களுக்கு ஊடகத்துறைக்கான பண்டாரவன்னியன் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்

இந்நிகழ்வில் பிரதமவிருந்தனராக கலந்துகொண்ட மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் தலைவரும் முன்னைநாள் முல்லைத்தீவு மாவட்ட செயலாளருமான நாகலிங்கன் வேதநாயகம், முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் அருளம்பலம் உமாமகேஸ்வரன் கௌரவ விருந்தினராக கலந்துகொண்ட முல்லைத்தீவு மாவட்ட மேலதிக மாவட்ட செயலாளர் சிவபாலன் குணபாலன், வடக்கு மாகாண கல்வி பண்பாட்டாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டு துறை அமைச்சின் உதவிச் செயலாளர் சுரேந்திரன் சிறப்பு விருந்தினராக ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலய பரிபாலன சபை தலைவர் சிவசுந்தரம் கணேசபிள்ளை மதத்தலைவர்கள், துணுக்காய் பிரதேச செயலாளர், வெலிஓயா பிரதேச செயலாளர், ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தினுடைய உதவி பிரதேச செயலாளர் உள்ளிட்டவர்களால் பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்துகௌரவிக்கப்படடதோடு நினைவுக் கேடயம், சான்றிதழ் நினைவு பரிசு என்பன வழங்கி கௌரவிக்கப்பட்டனர்

சண்முகம் தவசீலன்








# விவசாய மேன்மை விருது வழங்கல் நிகழ்வும் கண்காட்சியும்.

முல்லைத்தீவு மாவட்ட செயலகமும் முல்லைத்தீவு விவசாய திணைக்களமும் இணைந்து நடாத்தும் விவசாய மேன்மை விருது வழங்கும் நிகழ்வும் கண்காட்சியும் மாவட்ட அரசாங்க அதிபர் திரு.அ.உமாமகேஸ்வரன் அவர்களின் தலைமையில் முல்லைத்தீவு மாவட்ட செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் நேற்றைய தினம் சிறப்பாக நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர் திரு.ம.ஜெகூ அவர்களும், சிறப்பு விருந்தினராக மாகாண விவசாயப் பணிப்பாளர் -வடமாகாணம் திருமதி .ச.செந்தில்குமரன் அவர்களும் கலந்து நிகழ்வை சிறப்பித்தார்கள்.

விவசாய மேன்மை விருது வழங்கல் மற்றும் கண்காட்சி நிகழ்வானது முல்லைத்தீவு மாவட்டத்தின் விவசாயத் துறையை மேலும் முன்னேற்றும் வகையில் விவசாயம் மற்றும் உணவுத் துறையை முன்னோக்கி நகர்த்தும் சிறந்த முயற்சியாளர்களை அங்கீகரித்து ஊக்குவித்தல், விவசாயம் உணவுத் துறையின் முக்கியத்துவம் மற்றும் நாட்டின் பொருளாதாரத்தில் அதன் தாக்கம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல் போன்ற குறிக்கோள்களை மையமாக கொண்டு நடாத்தப்பட்டது.

இந்நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்டத்தை சேர்ந்த சிறந்த பயிர்ச்செய்கையாளர்கள், சிறந்த கால்நடை வளப்பாளர்களை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு விருதுகளும் சான்றிதழ் களும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

மேலும் இந் நிகழ்வில் "நவீன விவசாயம்" எனும் தொனிப் பொருளில் கலாநிதி எஸ்.ஜெ.அரசகேசரி அவர்களின் சிறப்புரையும் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் முல்லைத்தீவு மேலதிக மாவட்ட செயலாளர் சி.குணபாலன், மாவட்ட உள்ளகக் கணக்காய்வாளர் க.லிங்கேஸ்வரன், மாவட்ட பிரதம கணக்காளர் ம.செல்வரட்ணம், , சமுர்த்தி பணிப்பாளர் மு.முபராக் மாவட்ட பதில் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி.க. ஜெயபவானி, முல்லைத்தீவு விவசாய திணைக்கள பிரதிப்பணிப்பாளர் திருமதி. யாமினி மற்றும் பிரதேச செயலாளர்கள், உதவி மாவட்ட செயலாளர், உதவி திட்டமிடல் பணிப்பாளர்கள்,அரச திணைக்களங்களின் உயரதிகாரிகள், உத்தியோகத்தர்கள், விவசாயிகள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.





# அரசுக்கு வெள்ளையடிக்கும் செயற்பாட்டையே உலகத் தமிழர் பேரவை முன்னெடுக்கின்றது!



## சீறுகின்றார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

தமிழர் தாயகப்பகுதிகளில் திட்டமிடப்பட்ட இனவழிப்பு நடவடிக்கைகளும், தமிழர்களுக்கு எதிரான அடக்குமுறைகளும் மேலோங்கியுள்ள சூழ்நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை மையமாகக்கொண்டு உலகத்தமிழர் பேரவையினால் அண்மையில் முன்னெடுக்கப்பட்டிருக்கும் முயற்சியை அரசாங்கத்துக்கு "வெள்ளையடிக்கும்" செயற்பாடாகவே தாம் கருதுகிறார் எனத் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

அது மாத்திரமன்றி அடுத்த ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது. அதில் இதுவரை காணாத பாரிய சரிவொன்றைச் சந்திக்கநேரும் என்பதால் தமது வாக்கு வங்கியைப் பாதுகாத்துக்கொள்ளும் அதேவேளை, தமது உதிரிகளான உலகத் தமிழர் பேரவையின் ஊடாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அங்கீகாரத்தை வழங்கும் மறைமுக நடவடிக்கையில் கூட்டமைப்பு ஈடுபட்டிருப்பதாகவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஒவ்வொரு தனிநபரும் சமாதானமாகவும், கௌரவத்துடனும், நம்பிக்கையுடனும், எவ்வித பயமும் சந்தேகப்படுதலுமின்றி சமமான உரிமைகளை அனுபவித்து வாழக்கூடிய ஓர் இலங்கை உருவாக்கப்படவேண்டும் என்ற தொனிப்பொருளை மையப்படுத்திய "இமயமலை" பிரகடனம் உலகத்தமிழர் பேரவையின் ஊடகப்பேச்சாளர் சுரேன் சுரேந்திரனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கடந்த வாரம் கையளிக்கப்பட்டது.

அப்பிரகடனத்தை முற்றாக நிராகரித்தும், உலகத்தமிழர் பேரவையின் செயற்பாட்டைக் கண்டித்தும், இவ்விடயத்தில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியும் நேற்றுப் புதன்கிழமை கொழும்பிலுள்ள தனது இல்லத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

**அங்கு அவர் மேலும் கூறுகையில் -**

பௌத்த தேரர்கள் உள்ளிட்ட தரப்பினருடன் நேபாளத்தில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையை அடுத்து, கடந்த ஏப்ரல் 27 இல் கைச்சாத்திடப்பட்ட 6 அம்சங்களை உள்ளடக்கிய "இமயமலை" பிரகடனத்தைக் கடந்த வாரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளித்துள்ள உலகத்தமிழர் பேரவை உறுப்பினர்கள், அதுகுறித்து இலங்கையில் பதிவுசெய்யப்பட்டுள்ள பல்வேறு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

அதுமாத்திரமன்றி இலங்கையிலுள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகளையும் சந்தித்து அப்பிரகடனத்துக்கு அங்கீகாரம் கோரியுள்ளனர்.

முதன்முதலாக உலகத்தமிழர் பேரவை உருவாக்கப்பட்டபோது, அது பல்வேறு அமைப்புக்களையும் உள்ளடக்கியதோர் குடை அமைப்பாகவே காணப்பட்டது. அதன்படி அவ்வமைப்பு உருவாக்கப்பட்ட போது அதில் அங்கம்வகித்த (பின்னர் அதிலிருந்து விலகிய) பல அமைப்புக்கள் ஒன்றிணைந்து இப்பிரகடனத்தைக் கண்டித்தும், விமர்சித்தும் அறிக்கை வெளியிட்டுள்ளன.

குறிப்பாக உலகத்தமிழர் பேரவையானது புலம்பெயர் தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகத் தம்மைக் காண்பித்துக் கொள்வது தவறு எனவும் அவ்வமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

இவ்வாறானதொரு பின்னணியில் உலகத்தமிழர் பேரவையின் ஊடகப் பேச்சாளர் சுரேன் சுரேந்திரன் எம்மைச் சந்தித்து இதுகுறித்துக் கலந்துரையாடுவதற்கு அனுமதி கோரியிருந்தார். இருப்பினும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் மத்திய குழு அக்கோரிக்கையை அடியோடு நிராகரித்ததுடன், அதற்கான காரணங்களைத் தெளிவுபடுத்தி அவருக்குரிய பதிலும் அனுப்பிவைக்கப்பட்டது.

மாவீரர் நாளில் தமது அன்புக்குரியவர்களை நினைவுகூருவதற்கு ஒன்றுகூடியவர்களுக்கு எதிராகத் தற்போதைய அரசாங்கம் பயங்கரவாதத் தடைச்சட்டத்தைப் பிரயோகிக்கின்றது. வட, கிழக்கு மாகாணங்களில் தமிழ்மக்களுக்கு எதிரான திட்டமிட்ட இனவழிப்பு அரங்கேற்றப்பட்டுவருகின்றது.

இவ்வாறு அடக்குமுறைகள் மேலோங்கியுள்ள சூழ்நிலையில், ரணில் விக்கிரமசிங்கவை மையப்படுத்தி உலகத்தமிழர் பேரவையினால் முன்னெடுக்கப்பட்டிருக்கும் இம்முயற்சியை அரசாங்கத்துக்கு வெள்ளையடிக்கும் செயற்பாடாகவே நாங்கள் பார்க்கின்றோம்.

அதுமாத்திரமன்றி முன்னைய காலங்களில் தமிழர்களின் நலன்களுக்கு விரோதமாக செயற்பட்டுவந்த உலகத்தமிழர் பேரவை, இன்னமும் அதிலிருந்து மாறவில்லை என்பதையும் இந்நகர்வு வெளிப்படுத்துகின்றது.

உலகத் தமிழர் பேரவையின் இந்த நடவடிக்கைகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், குறிப்பாக இரா. சம்பந்தனும், எம்.ஏ.சுமந்திரனும் அங்கீகரித்திருக்கின்றனர் எனத் தெரிகின்றது. கடந்த காலங்களிலும் கூட்டமைப்பு உலகத்தமிழர் பேரவையுடன் மிக நெருங்கிய உறவைப் பேணிவந்திருப்பதுடன், கூட்டமைப்பிலிருந்து வேறுபடுத்திப் பார்க்கமுடியாத அதன் தொடர்ச்சியாகவே பேரவை இயங்கிவருகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாகச் செயற்படுவதாகக் கடந்த காலங்களில் கடுமையான விமர்சனங்கள் எழுந் திருந்தன. அதன் விளைவாகவே கடந்த 2020 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் கூட்டமைப் பின் வாக்குவங்கி வெகுவாகச் சரிவ டைந்தது.

எனவே எதிர்வரும் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலும் நடைபெறவுள்ள நிலையில், அதில் இதுவரை காணாத பாரிய சரிவொன்றைச் சந்திக்கநேரும் என்பதால் கூட்டமைப்பு "நல்ல பிள்ளையாக" செயற்பட முயற்சிக்கின்றது.

அதன்படி தமது வாக்குவங்கியைப் பாதுகாத்துக்கொள்ளும் அதேவேளை, தமது உதிரிகளான உலகத்தமிழர் பேரவையின் ஊடாக ஜனாதிபதி ரணில் விக்க்ரமசிங்கவுக்கு அங்கீகாரத்தை வழங்கும் மறைமுக நடவடிக்கையில் கூட்டமைப்பு ஈடுபடுகின்றது.

"இமயமலை" பிரகடனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள 6 அம்சங்களும் வட, கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ்மக்களுக்கோ அல்லது வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் உள்ளிட்ட பாதிக்கப்பட்ட தரப்பினருக்கோ அல்லது அண்மையில் தமது அன்புக்குரியவர்களை நினைவு கூர்ந்தமைக்காகப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டவர்களுக்கோ எவ்வகையிலும் பயனளிக்காது.

மாறாக அவை தமிழர் தாயகப்பகுதிகளில் திட்டமிட்ட விதத்தில் இடம்பெற்றுவரும் இனவழிப்பை மூடிமறைத்து, அதனை நேர்மறையான விதத்தில் காண்பிப்பதற்கும், தற்போதைய அரசமைப்பில் உள்ள விடயங்களை நடைமுறைப்படுத்துமாறு வலியுறுத்துவதன் ஊடாக தமிழ்மக்களுக்குப் போலியான நம்பிக்கையைக் கொடுப்பதற்கும், பொறுப்புக்கூறலுக்கு முற்றுப்புள்ளி வைத்து போலியான நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பும் வகையில் அரசாங்கம் முன்னெடுத்துவரும் செயற்பாடுகளுக்கு ஆதரவளிப்பதற்கும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு முழுமையான அங்கீகாரத்தை வழங்குவதற்குமே பங்களிப்புச் செய்யும்.

எனவே இதனை முற்றாக நிராகரிக்க வேண்டுமெனவும், இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டால் பாரிய பின்விளைவுகளைச் சந்திக்கநேரும் என்ற பாடத்தை அவர்களுக்குப் புகட்டவேண்டும் எனவும் தமிழ் மக்களிடம் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கின்றோம். - என்றார்.

**தேசியம் பத்திரிகையில்**

**உங்கள்**

**விளம்பரங்களை பிரசுரிக்க**

**தொடர்பு கொள்ளுங்கள்..!**

**021 222 7557**

**+94 77 149 9094**

தேசியம்
www.thesiyamnews.com THESIYAM